# மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையம், நாமக்கல் - 637 002, சேலம் மாவட்டம்.

## நிறுவனத் தோற்றமும் அதன் பல்முனைப் பரிமாணங்களும்.

****

மக்களின் அக இருள் நீக்க கிறிஸ்தவர்கட்கு ஜெருசலேமும், இஸ்லாமியருக்கு மெக்காவும், பௌத்தர்கட்கு விஹாரங்களும், இந்துக்களுக்கு இந்தியா முழுமையும் பரவிநிற்கும் சக்திவாய்ந்த புனித கோவில் கர்ப்ப கிரகங்களும் இருப்பதைப் போல், இம்மாவட்ட துவக்க, உயர் துவக்கநிலைக் கல்வி சிறக்கவும், அறியாமை இருள் அகலவும் வாய்ந்த ஞானபீடமாக 1988-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் நாள் இம்மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி மையம், சேலம் மாவட்டம் நாமக்கல்லில் உதயமாகியது. திருமதி. எஸ். சீதாலக்ஷ்மி அவர்கள் இதன் முதலாவது முதல்வராகப் பொறுப்பேற்று இந்நிறுவனத்திற்கு பொலிவு சேர்த்தார்கள்.

இம்மாவட்டத்தைச் சார்ந்த 12-ம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்ற 25 ஆண், 25 பெண் என்ற விகிதத்தில் அரசு சேர்க்கை நெறிமுறைகளுக்கு இணங்க, இரண்டு வருட பட்டயப் படிப்பில் ( D.T.E. ) சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அனைவருக்கும் படிப்புக் கட்டணம் இலவசமானது.

இப்பயிற்சி நிறுவன கட்டடத் திறப்பு விழா 15.03.1990ல் அந்நாள் தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு. க.அன்பழகன் கலந்து கொள்ளவும், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு.வா.அ.சிவஞானம் அவர்கள் வாழ்த்துரையோடும் இனிதே நடந்தேறியது.

17.11.89-ல் இந்நிறுவன முதல்வர் ஆக திரு.செ.பொன்னுசாமி அவர்களும், 06.07.'90ல் திருமதி.க.சரோஜா அவர்களும் அடுத்தடுத்து முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

இந்நிறுவனம் கல்விப் பணியாற்ற வேண்டிய 7 பிரிவுகளையும், நிர்வாகப் பணியில் முதல்வருக்கு உதவ ஒரு பிரிவினையும், கல்விப் பணிக்கான பிரிவுகளில் முதலாவது 'பணிமுன் பயிற்சி' அளிக்கும் தலையாய பொறுப்பினை குறிக்கோளாகக் கொண்டது. புதிய கல்விக் கொள்கை இலக்குகளுக்கேற்ப அமைக்கப்பட்ட பாடத் திட்டப்படி முதலாண்டில் 50, இரண்டாம் ஆண்டில் 50 மாணவ மாணவியரை தரம் சிறந்த விரிவுரையாளர்களைக் கொண்டு, சமுதாய நல்மாற்றத்தை உருவாக்கும் ஆசிரியச் சிற்பிகளாக உருவாக்கப்படுகின்றனர். பல பக்கத் திறமை, தலைமைப் பண்பு, தேசிய ஒருமைப்பாடு, குடிமைப் பண்பு முதலான தேசிய நற்பண்புகளை அவர்கள் தம்கையில் ஒப்படைக்கப்படும் மாணவரிடம் வளர்ப்பார்கள்.

பணியிடைப் பயிற்சி, களப்பணி, கண்டுபிடிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவு இந்நிறுவனத்தின் 2-வது அங்கமாக செயல்பட்டுவருகிறது. இம்மாவட்டத்தில் துவக்க, உயர் துவக்கப் பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவு செய்ய உதவும் ஈராண்டு, ஐந்தாண்டுத் திட்டங்களைத்தயாரித்து செயல்வடிவம் கொடுத்துவருகிறது.

மூன்றாம் பிரிவான 'மாவட்டக் கருவூலப் பிரிவு' வயதுவந்தோர் கல் திட்டத்தில் பணியாற்றும் ஊக்குநர்களுக்கும், தொடர்கல்வி மையத்தில் பணியாற் தொடர்பாளர்களுக்கும், பணிமுன் பயிற்சி, பணியிடைப் பயிற்சி, மதிப்பீட்டு ப ஆகியவற்றை அளிக்கிறது.

'திட்டமிடுதலும் மேலாண்மையும்' பிரிவு மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிலையத்தின் நான்காம் பிரிவாகும். மாவட்டம் முழுவதற்குமான கல்விப் புள்ளி விபரங்களைத் திரட்டி வகைப்படுத்தல், 'அனைவருக்கும் ஆரம்பக் கல்வி' என்ற வகையில் மிகவும் பின்தங்கிய பகுதிக்குச் சென்று கல்விக்கண் திறத்தல், பணியிடைப் பயிற்சியில் தொடக்க/உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு பள்ளி அமைப்புத் திட்டம், பள்ளி இணைப்புத் திட்டம், நுண்நிலைத் திட்டமிடுதல், நிறு திட்டமிடுதல், பள்ளி மேலாண்மை முதலிய துறைகளில் பயிற்சி அளித்தல் ஆகியன இப்பிரிவின் பணிகளாகும்.

ஐந்தாம் பிரிவான 'கல்வித் தொழில் நுட்பப் பிரிவில்' மலிவுநிலைக் கருவிகள். தேவையற்ற பொருட்களைக் கொண்டு பெறப்படும் உபயோகமுள்ள பொருட்கள் முதலியன தயாரிக்கப்படுகிறது. இதுபோன்ற கற்பித்தல் கருவிகளை உருவாக்கி பணியிடைப் பயிற்சிக்கு வரும் ஆசிரியர்களும், வயதுவந்தோர் கல்வி திட்டம் மற்றும் முறைசாரா கல்வித் திட்ட ஊக்குநர் தொடர்பாளர்கள் ஆகி ர்களுக்கும் காட்டி அவர்களையும் இத்தகு கற்பித்தல் பொருட்களை தத்தம் மாணவர்களுக்கு செய்துகாட்டுதலில் ஆர்வத்தைத் தூண்டும் பணியை மேற்கொள்

பணியிடைப் பயிற்சி, பணிமுன் பயிற்சி இவற்றில் வானொலி, தொலைக்க நிகழ்ச்சிகளில் அறிவியல், மொழி, மருத்துவம், தேசிய ஒருமைப்பாடு, கா -போம் கற்போம், வினாடி வினா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளைக் காணல் கேட்டல் பதிவு நாடாக்களில் பதிவு செய்து கற்பித்தல் பணியில் பயன்படுத்தப் -படுகிறது.

பணி அனுபவக் கல்வியான ஆறாவது பிரிவில் மலிவுநிலைத் துணைக்கருவிக மதிப்பீட்டுக் கருவிகள் போன்றவற்றைத் தயாரித்துப் பணிப்பட்டறை, பணியிடை பயிற்சி, பணிமுன் பயிற்சி முதலியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

துவக்க, உயர்துவக்கப் பள்ளிகளிலும் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தி முறைசாராக் கல்வியிலும் பணி அனுபவசெயல் திட்டங்களைப் புகுத்த பலகட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஏழாம் பிரிவான 'கலைத் திட்டமும் மதிப்பாய்வும்' பிரிவு தத்தம் மாவட்டத்திற்கு ஏற்ப கலைத் திட்டம் தயாரித்தல், அதில் விரிவான தொடர் மதிப்பீட்டிற்கு வழிவகை செய்தல், இத்தோடு தேர்வுகள், வினா வங்கிகள், மதிப்பீட்டு அளவைகள், உற்றுநோக்கல் அட்டவணைகள், குறையறி சோதனைச் வழிகாட்டிகள், குறைதீர்க்கும் செயல் திட்டங்கள் ஆகியவற்றை நிறுவனத்தின் ம பிரிவுகளோடு இணைந்து உருவாக்குதல் பணியை மேற்கொள்கிறது.

.3.

இறுதியாக நிறுவனத்தின் எட்டாவது பிரிவாக நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு நிறுவனத்தின் சகல பணப்பொறுப்புகள், அலுவலக நடைமுறைகள் நிறுவனத்திற்கும் மேலதிகாரிகளுக்கும் இணைப்புப் பாலம் அமைத்தல், மாணவர்களின் சேர்க்கை, நீக்கல், தேர்வு ஆயத்தங்கள் ஆகிய பொறுப்புகளை சீராக நிறை--வேற்றி நிறுவனத்தின் நற்பெயரைக் காத்துவருகிறது.

விடுதி:-

மாணவர்க்கும், மாணவியர்க்கும் தனித்தனியே தங்கும் விடுதிகள் உள்ளன. மாணவியர் அனைவரும் விடுதியில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கான உணவு மற்றும் பிறவசதிகள் அவர்களாலேயே பொறுப்புடன் கவனித்துக் கொள்ளப்--பட்டுவருகிறது. இதனைக் கண்காணிக்கவும், உடனிருந்து முறைபடுத்தவும் தனித்தனியே உதவி விடுதிக்காப்பாளர்கள் செயல்படுகிறார்கள்.

மாணவர் நேரடிக் கண்காணிப்பு செயல்திட்டம்:-

பயிற்சி நிறுவன பணிமுன் பயிற்சி மாணவ மாணவியர் அனைவரும் நிறுவன முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் வசம் சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் படிப்பு, ஒழுக்கம், நடைமுறை--கள், கல்வித் தேக்கநிலை களைதல் போன்றவைகளில் நேரடிக் கவனம் செலுத்தி மாணவர்களை மேம்படுத்தும் பொறுப்பு கண்காணிப்பாளர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

DIRECTOR : THIRU R.NARAYANASAMY,M.A.,B.Ed.

| Sl.No. | Name of the Post | Name of person |
|---|---|---|
| | PRINCIPAL | Tmt.K.Saroja,M.A.,M.Ed., |
| 1. | **Branch-I Pre-Service:** | |
| | Senior Lecturer | Thiru S.N.Parameswaran,M.A.,M.Ed. |
| | Lecturers: | |
| | 1. Language | "" S.Kannan,M.A.,M.Ed. |
| | 2. Mathematics | "" C.Periasamy,M.Sc.,M.Ed. |
| | 3. Environmental Science | "" J.Charles William,M.Sc.,M.Ed. |
| | 4. Edl.Psychology & Child Study | "" C.Nallathambi,M.A.(Geo), M.A.(Pol.Sci.),M.A.(Soci.), ~~M.A.(Psy)~~, M.Ed. |
| | 5. Foundation Courses | "" S.Sivaprakasam,M.A.,M.Ed. |
| | 6. Physical Education | "" K.Somasundaram,M.A.,B.Sc., M.Ed.,M.P.Ed. |
| | 7. Art Education | -Post Vacant- |
| 2. | **Branch-II Inservice Programmes Field Interaction and Innovation Coordination:** | |
| | Senior Lecturer | Thiru K.Kaligounder,M.A.,M.Ed. |
| | Lecturer | "" S.Gnanaprakasam,M.A.,M.Ed. |
| | Junior Assistant | "" J.K.Jayagopal |
| 3. | **Branch-III District Resources Unit for Adult and Non-Formal Education:** | |
| | Senior Lecturer | Thiru D.Jayaraj Peters,M.A.,M.Ed. |
| | Lecturers: | |
| | 1. Adult Education | "" K.Nallannan,M.A.,M.Ed. |
| | 2. Non-Formal Education | "" K.Kuppusamy,M.A.,M.Ed. |
| | Junior Assistant | "" G.Arumugam |

| Sl.No. | Name of the Post | | Name of person |
|---|---|---|---|
| 4) | **Branch-IV Planning and Management:** | | |
| | Senior Lecturer | : | Thiru M.Shanmugasundaram, M.A., M.Ed., Dip.Phon.(RIE), DTE(RI DCE(IGNU). |
| | Lecturer | : | Thiru D.Ramachandran, M.Com., M |
| | Statistician | : | "" N.Thangaiyan, M.A. |
| 5. | **Branch-V Educational Technology:** | | |
| | Senior Lecturer | : | Thiru S.Balasubramaniam, M.A., |
| | Lecturer | : | "" V.Ranganathan, M.Sc., M.Ed., DEPA (NIEPA). |
| | Technician | : | - Post vacant - |
| 6. | **Branch-VI Work Experience:** | | |
| | Senior Lecturer | : | Thiru D.Gunasekaran, M.A., M.Ed PGDTE(CIEFL). |
| | Lecturer | : | "" A.Senthilkumar, M.Sc., M.Ed. |
| | Work Experience Teacher | : | Selvi S.Aghnes |
| 7. | **Branch-VII Curriculum Material Development and Evaluation** | | |
| | Senior Lecturer | : | Thiru N.Narasimhan, M.A., M.Ed. |
| | **Lecturers:** | | |
| | 1.Curriculum and Methods | : | "" K.Sundaram, M.Com., M.Ed. |
| | 2.Science/Maths/ Language/Social Studies | ) | "" R.Kanagarajan, M.Sc., M.Ed. |
| 8. | **Branch-VIII Administration Section:** | | |
| | 1. Superintendent | : | Thiru M.Ramasamy |
| | 2. Assistant (Sel.Grade) | : | Thiru A.R.Manickam |
| | Assistant | : | "" A.Kandasamy |
| | 3. Stenographer | : | - Post Vacant - |
| | 4. Typist (Sel.Grade) | : | Tmt.K.Vasanthakumari |
| | Typist | : | Thiru R.Periannan |
| | 5. Librarian | : | Thiru M.A.Selvan, M.A., B.Ed., B.L.I.Sc. |
| | 6. Lab.Assistant | : | Tmt.M.Navaneethamani |
| | 7. Part-Time Medical Officer | ) | - Post Vacant - |
| | 8. Office Assistant | : | Thiru K.Sugavanam |
| | 9. Night Watchman | : | Thiru K.Raman |
| | 10. Casual Labourer | : | Tmt.K.Indiragandhi |

*********